1974 சனவரி 24]

மாயூரம் நகராட்சி ஆணையாளருடன் கடிதத் தொடர்பு கொள்ளப் பட்டு வருகிறது. இந்த வரைவுச் செயற்குறிப்பை ஆய்வு செய்த பின்னர் அரசின் நிர்வாக ஒப்பளிப்பை பெறுவதற்காக அதனை தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் அனுப்பிவைக்கும். வரைவு செயற்குறிப்புக்கு அரசு அனுமதி வழங்கிய பின்னர் அரசுக்கடன் வேண்டி அந்த நகராட்சி விண்ணப்பிக்குமானால் அப்போது அது பரிசீலனை செய்யப்படும்.

திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் திட்டங்கள்.

*129 **வினா—திரு. த. சோனையா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1973-74-க்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுவதாக உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் 1973-74-ல் குடிநீர் வழங்கப்பட உள்ள கிராமங்கள் எண்ணிக்கை 13.

(இ) மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.560 லட்சம்.

(முற்பகல் 9-30)

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, இந்த திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக் கிறபோது முதலிலே எந்த எந்த கிராமங்களில் குடிக்கத் தண்ணீர் இல்லையோ அவற்றுக்கு முதலில் கொடுக்கவேண்டும், அப்படியின்றி ஏற்கனவே குடிக்கத் தண்ணீர் வசதியுள்ள கிராமங் களுக்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி அளிக்கிறார்கள், அப்படியின்றி இனி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் கலந்து கொண்டு, குடிதண்ணீர் வசதியற்ற எந்த எந்த கிராமங்களுக்கு முதலில் குடிதண்ணீர் வசதி அளிப்பது என்பதை நிர்ணயிப் பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தப் பட்டியல் தயாரித்த போது அந்தப் பட்டியலில் உள்ள கிராமங்கள் எல்லாவற்றுக்குமே உதவுவதாக மத்திய அரசு அறிவித்திருந்த காரணத்தினால் ஏறத்

தாழ நூற்றுக்கணக்கான இடங்கள் அந்தப் பட்டியலில் வந்திருக்கின்றன. இதுவரை 14 தொகுப்புகள் வந்திருக்கின்றன. திருப்புவனம் ஊராட்சியில் 13 கிராமங்கள் எடுக்கப்பட்டு, 4 கிராமங்களுக்கு திட்டங்கள் நிறைவேறிவிட்டன. 9 கிராமங்களுக்கு விரைவில் நிறைவேறும். இவை எல்லாமே ஆக்சிலிரேடெட் ப்ரொக்ராமில் வருகிற காரணத்தினால் இவற்றிலும் முன்னுரிமை வழங்க முன்னால் யோசிக்கப்படவில்லை. தற்போது எல்லாவற்றுக்குமே நிதி கொடுப்பதில் இடையூறு இருக்கிற காரணத்தினால் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள பட்டியலில் தேவையானால் மாற்றம் செய்ய மறுபரிசிலனை செய்யலாம்.

*130 வினா—**திரு. த. சோணையா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பாட்டம் அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கிராம குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள், 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது. அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாட்டம் அரிசன காலனி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 46,400-க்கான திட்ட மதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆழ்த் துளைக்கிணறு தோண்டி அதிலிருந்து நீரேற்று குழாய்கள் மூலம் தண்ணீரைக் கிராமத்தினுள் அமைக்கப் பெறவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டுவந்து, கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இத்திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.